# கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம்
# Coventry Tamil Welfare Association

http:// HYPERLINK http://www.tamils.org.uk
www.tamils.org.uk
Email: coventrytamils2002@gmail.com

தலைவர்:- உயர்திரு க.அரியரத்தினம். 07823535094

மார்கழி மாத இதழ்
NEWS BULLETIN
DECEMBER 2020
ஆக்கம்:- ஸ்ரீ.பகீரதன்


| நாள் | நிகழ்வு |
|---|---|
| 12/09/20 முதல் | புதிய தவணைக்கான தமிழ்ப்பாட, கலைப்பாட வகுப்புகள் Zoom செயலி மூலம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.<br>President Kennedy பாடசாலை வாடகைக்குக் கிடைத்ததும், அங்கு வகுப்புகள் தொடரும்.<br>உங்கள் ஒவ்வொருவருக்கும், Zoom இணையத்தள அடையாளத் தொடர்பு விபரம் தனித்தனியாக அனுப்பி வைக்கப்படுகிறது. ஒவ்வொரு தவணையும், ஆசிரிய வேதனத்துக்காகத் தவணைக்கு £25 அல்லது ஒரு வருடத்திற்கு (மூன்று தவணைகள்) £70 அறவிடப்படுகிறது.<br>கலைப்பாட ஆசிரியர்களின் தொடர்புகளுக்கு<br>கர்நாடக சங்கீதம்<br>திரு.தீனதயாளன் 07886969194<br>திருமதி.வானதி 07523431759<br>பரதநாட்டியம்<br>திருமதி சத்தியகௌரி 07773591591<br>திருமதி அஜந்தா 07425577697<br>மிருதங்கம் - செல்வன்.தனுஜன் 07582418364<br>வீணை - செல்வி.சாத்விகா 07556130208<br>மேலும் தகவல்களைப் பெற்றுக்கொள்ள திருமதி பொன்மணி 07436542925 அவர்களைத் தொடர்பு கொள்ளவும்.<br>கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழகம், கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம். |
| 19/12/20 | நத்தார் விடுமுறை. மீண்டும் பாடசாலை 09/01/2021 அன்று வழமையான நேரத்துக்கு ஆரம்பமாகும்.<br>*அனைவருக்கும் இனிய நத்தார் மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!* |

## பரிமாண வளர்ச்சிப் பாதையில் தமிழ்

"தமிழறிவு" மின்னியல் முறையில் ஆக்கம் பெற்றுள்ளது. மேலை நாட்டுத் தமிழ்ப் பாடசாலை ஒன்றியத்துடன், பிரித்தானிய தமிழ்ப் பரீட்சைச் சபை இணைந்து, ஐக்கிய இராச்சிய அரசின் கல்விப்பிரிவுக்குத் தமிழ் மொழியையும் அங்கீகரிக்கப்பட்ட சமூக மொழிகளுள் ஒன்றாக ஏற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்ற தருணத்தில், அதற்கு ஆதரவாகத் தமிழ்ப் பாடத் திட்டத்தினை இலண்டன் பல்கலைக்கழகக் 'கோல்ட்சிமித்" வளாகத்தினூடாகப் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது.

அப்பாடத் திட்டத்திற்கு ஏற்புடையதான தமிழறிவு நூல்களை (பாலர் வகுப்பு முதல் மேல் வகுப்புகள் வரை) பிரசுரம் செய்வதன் மூலம், தமிழ் மொழியைத் தரணி எங்கும் பரப்பும் பொறுப்பு எம்மைச் சாரும். எமது முயற்சியின் பயன், தொடர்ந்து தமிழைப் பயல்வோரினதும், பயிற்றுவிப்போரினதும் ஊக்கம் மிகுந்த செயற்பாட்டிற் தங்கியுள்ளது.

எமது தமிழறிவுப் பாடநூல் வரிசைகளைப் பாலர் வகுப்பு முதல் பட்டய வகுப்பு வரை வெளியிடும் பணியில் தன்னலம் கருதாது தமது ஒத்துழைப்பை நல்கும் சான்றோருக்கும், ஊக்கம் தரும் பெற்றோர், பெருமக்கள் யாவருக்கும் எமது உள்ளம் கனிந்த நன்றிகள்.


வாழ்க தமிழ், வாழ்க தமிழ் கூறும் நல்லுலகம்

கந்தையா அரியரத்தினம்,
செயலாளர்,
பிரித்தானியா தமிழ் பரீட்சைச் சபை.

## புதிய வகைக் கொரோணா

தற்போது, பரபரப்பாகக் கொரோணா புதிய வடிவில் மிகவும் வேகமாகப் பரவி, நாளுக்கு நாள் தொற்றும் எண்ணிக்கை மிக அதிகரிப்பதும், பிரித்தானியா நான்காம், ஐந்தாம் அடுக்கு எனும் அபாய நிலைக்குள் தள்ளப்பட்டு இருப்பதும் அனைவரும் அறிந்ததே.

என்னதான் கொரோனா தனது வடிவத்தை மாற்றினாலும், கைகளைக் கழுவும் விதமோ அல்லது முக/வாய்க் கவசங்களின் வடிவங்களோ மாறப்போவதில்லை. நாம் அரச விதிமுறைகளைக் கடைபிடிப்பதன் மூலம் எம்மை மட்டுமல்ல மற்றவர்களையும் பாதுகாத்துக்கொள்ள முடியும்.


இயேசு பாலன் பிறந்தாரே...

பெத்லகேம் நகரினிலே
மாடுகள் தொழுவத்திலே
மார்கழி இருபத்தைந்திலே
தெய்வீக பாலன் பிறந்தாரே

பாவிகளை மீட்டிடவே
பாவங்களைப் போக்கிடவே
பாரினில் அன்பு நிலைத்திடவே
பரமன் இயேசு உதித்தாரே

அயலவர்களை நேசித்திட
தீமையிலும் நன்மை புரிந்திட
ஏழைகளோடு பகிர்ந்தளித்திட
இறைமகன் தோன்றினாரே

குழந்தைகளை அரவணைக்கவும்
நேயர்களைக் இணைப்புத்தவும்
துன்பங்களைத் துடைக்கவும்
தூய மீட்பர் வந்துள்ளாரே

இல்லங்கள் எங்கும் ஒளி வீச
உள்ளங்களில் அமைதி நிலவ
இயேசு பாலன் ஆசி பெற்று
அகமகிழ்ந்து நலம் பெறுவோம்

லக்ஷன் திருவரங்கன்
வகுப்பு 1




## கிறிஸ்மஸ் மரம் தோன்றிய வரலாறு

கிறிஸ்மஸ் தாத்தா, அவர் தரும் கிறிஸ்மஸ் பரிசு, கிறிஸ்மஸ் ஸ்டார், கிறிஸ்மஸ் வாழ்த்து அட்டை, கிறிஸ்மஸ் குடில், கிறிஸ்மஸ் கேக் போலவே கிறிஸ்மஸ் மரமும் கிறிஸ்து பிறப்புக் கொண்டாட்டத்தின் முக்கிய அங்கமாக மாறிவிட்டது. அதன் வரலாறோ மிகவும் சுவையானது.

ஜெர்மனியில் கி.பி. பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் புனித போனிபேஸ் என்ற பாதிரியார். கிறிஸ்தவ மக்கள் மத்தியில் பல மூடநம்பிக்கைகள் இருந்ததாகச் சாடியும் எதிர்த்தும் வந்தவர் ஊரூராகச் சென்று மதப் பிரச்சாரம் செய்து வந்த அவர், "ஓக்" மரம் ஒன்றை மக்கள் வழிபடுவதைக் கண்டார். அச்செயலைக் கண்டு கடுங்கோபம் கொண்ட அவர், அந்த மரத்தை வெட்டி வீழ்த்தினார். அந்த மரம் மீண்டும் துளிர்த்துவிடாமல் இருக்க, அந்த மரத்தின் வேர்ப்பகுதியையும் அங்கிருந்து பெயர்த்தெடுத்து அப்புறப்படுத்தினார்.

ஆனால் மரம் இருந்த அதே இடத்திலிருந்து அடுத்த சில தினங்களிலேயே "ஓக்" மரக் கன்று முளைத்து விறுவிறுவென்று வளர்ந்து ஓராண்டு காலத்துக்குள்ளாக முன்பிருந்த மரத்தைப் போலவே கம்பீரமாக எழுந்து நின்றதைக் கண்ட மக்கள், அதை இயேசு உயிருடன் மீண்டெழுந்த உயிர்த்தெழுதலின் அடையாளமாகப் பார்க்கத் தொடங்கினார்கள்.

பாதிரியார் போனிபேஸ் தனது ஊழியத்தை முடித்துக்கொண்டு மீண்டும் அவ்வழியே திரும்பியபோது, தாம் வெட்டிப்போட்ட இடத்தில் புதிய மரத்தைக் கண்டு வியந்து அதனடியில் முழந்தாளிட்டு ஜெபிக்கத் தொடங்கினார். இதனால் கிறிஸ்தவ வழிபாட்டில் பத்தாம் நூற்றாண்டில் "ஓக்" மரம் உயிர்ப்பின் அடையாளமாக இடம்பெறத் தொடங்கியது.



சுமார் ஆயிரத்து ஐநூறாம் ஆண்டு மார்ட்டின் லூத்தர் கிங் ஒரு கிறிஸ்மஸ் காலப் பனி நாளில் நடந்து செல்கையில், சிறுசிறு பச்சை மரங்களின் மீது படர்ந்திருந்த பனி வெளிச்சத்தில் பிரமிக்க வைக்கும் அழகுடன் ஒளிர்வதைக் கண்டார். உடனே ஒரு "ஃபீர்" மரத்தையெடுத்து அதை மெழுகுவர்த்திகளால் அலங்கரித்து, அதைக் கிறிஸ்துவினுடைய பிறப்பு விழாவில் பயன்படுத்தினார். அன்றிலிருந்து கிறிஸ்மஸ் விழாக்களில கிறிஸ்மஸ் மரம் இடம் பெற்றது என்றும் சொல்கிறார்கள்.

கிறிஸ்மஸ் மரத்தின் கிளைகள் சிலுவையின் அடையாளத்தைக் கொண்டிருப்பதோடு, கிறிஸ்மஸ் மரத்தின் முக்கோண வடிவம் தந்தை, மகன், தூய ஆவி எனும் இயேசுவின் மூன்று பரிமாணங்களைக் குறிப்பதாகவும் எனவே இயேசு மனிதம் உருவான நாளை மரத்தை அலங்கரிப்பதன் மூலம் கொண்டாடுவது அதிக அர்த்தமுடையது என்றும் கிறிஸ்தவ விளக்கங்கள் பரிமாறப்படுகின்றன.

(இணையத்திலிருந்து.,...)

**இனிய புத்தாண்டு (2021) வாழ்த்துக்கள்!**